## தேசிய விளையாட்டுக்கள் நிதியம் - 2017

-----------------------------------------------------------------------

தேசிய விளையாட்டுக்கள் நிதியத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவினக் கணக்கு, உரிமை மூலதனத்திலான மாற்றங்கள் கூற்று காசுப்பாய்ச்சல்கூற்று மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1973 இன் 25 ஆம் இலக்க விளையாட்டுக்கள் அதிகாரச்சட்டத்தின் 25(4) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் நிதியத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

-----------------------------------------------------------------------

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

-----------------------------------------------------

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும். கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. கணக்காய்வு நோக்கெல்லையையும் அளவையும் தீர்மானிப்பதற்கு 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதியதிகாரச் சட்டத்தின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு தற்றுணிவு அதிகாரத்தை வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதும் என நான் நம்புகின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

தேசிய விளையாட்டுக்கள் நிதியத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டில் தியகம மஹிந்த ராஜபக்ஷ விளையாட்டு தொகுதியின் வருமானம் ரூபா 5,158,385 ஆக இருந்ததுடன் விளையாட்டு தொகுதியின் செயற்திட்ட முகாமையாளரால் அமைச்சிற்கு அனுப்பிவைக்கப்பட்ட வருமானங்களை செலவு வைத்தல் விபரங்களை உள்ளடக்கிய மாதாந்த அறிக்கையின் பிரகாரம் வருமானங்களின் கூட்டுத்தொகை ரூபா 5,083,640 ஆக இருந்தமையால் ரூபா 74,745 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

1973 இன் 25 ஆம் இலக்க தேசிய விளையாட்டுக்கள் அதிகாரச் சட்டத்தின் 25(2) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சு செயலாளரால் ஒவ்வொரு நிதியாண்டு முடிவடைந்ததன் பின்னர் முடியுமான அளவு துரிதமாக நிதியத்தின் நிர்வாகம் தொடர்பான அறிக்கையொன்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டிற்காக அவ்வாறானதொரு அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதியத்தின் நிதி விளைவுகள் ரூபா 5,824,605 ஆன பற்றாக்குறையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 60,702,914 ஆக இருந்தமையால், முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 54,878,309 பற்றாக்குறையில் வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. விளையாட்டு வீரர்களை கௌரவிக்கும் விழாவிற்கான செலவினம் ரூபா 71,630,350 இனால் குறைவடைந்தமை, முதலீட்டின் மீதான வட்டி ரூபா 3,958,153 இனால் அதிகரித்தமை, தியகம மஹிந்த ராஜபக்ஷ விளையாட்டு தொகுதியிலிருந்து மீளாய்வாண்டின் போது 1,289,478 ஆன தேறிய வருமானத்திலிருந்து பெறுவனவுகள் மற்றும் மானியங்கள் ரூபா 9,500,000 ஆல் அதிகரித்தமை மேற்படி பற்றாக்குறையில் வீழ்ச்சி தொடர்பில் பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

இலங்கையின் விளையாட்டுக்களை ஊக்குவித்தல், அவற்றை மேம்படுத்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல் நிதியத்தின் பிரதான நோக்கங்களாக இருந்ததுடன், தேசிய அரசாங்க சபையின் 1973 இன் 25 ஆம் இலக்க விளையாட்டுக்கள் அதிகாரச் சட்டத்தின் 22 ஆம்

பிரிவில் அதற்காக விளையாட்டு நிதியத்திற்கு சட்டரீதியான நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. 2007 ஆம் ஆண்டு முதல் விளையாட்டு அமைச்சின் செயலாளரின் முழுமையான மேற்பார்வையின் கீழ் தேசிய விளையாட்டு நிதியம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. 1973 இன் 25 ஆம் இலக்க விளையாட்டுக்கள் அதிகாரச்சட்டத்தின் 25(1)ஆம் பிரிவிற்கமைய நிதியத்தின் நிர்வாகத்திற்காக அமைச்சின் செயலாளரால் மீளாய்வாண்டிற்குரிய செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.2 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

2005/2006 சார்க் விளையாட்டு விழாவின் நீச்சல் குழாமிற்கு பயிற்சியளித்தல் எனக் குறிப்பிட்டு தனியார் நீச்சல் பயிற்றுவிப்பாளர் ஒருவருக்கு தேசிய விளையாட்டு நிதியத்திலிருந்து மீளாய்வாண்டின் போது ரூபா 4 மில்லியன் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதும் அக் கொடுப்பனவின் சட்டரீதியான தன்மையை உறுதிப்படுத்துவதற்கு அமைச்சு மற்றும் பயிற்றுவிப்பாளருக்கு இடையே கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கை, உரிய செலவின அறிக்கை, பட்டியல், மாதிரிப் பட்டியல் என்பன கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டின் ரூபா 4 மில்லியன் உட்பட ரூபா 5.3 மில்லியனான மொத்த செலவினத்தில் ரூபா 1.3 மில்லியன் 2012 ஆம் ஆண்டில் இதே வகையில் அந்த பயிற்றுவிப்பாளருக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 உள்ளகக் கணக்காய்வு

தேசிய விளையாட்டுக்கள் நிதியத்திற்காக மீளாய்வாண்டினுள் ரூபா 64 மில்லியனான வருமானம் மற்றும் நிதியத்தின் செலவினம் ரூபா 70 மில்லியன் ஆக இருந்ததுடன், நிதியத்திற்கு சொந்தமாக மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் காணப்பட்ட சொத்துக்களின் கூட்டுத்தொகை ரூபா 164 மில்லியனாக இருந்தது. அதற்கமைய நிதிப்பிரமாணம் 133 இற்கமைய உள்ளகக் கணக்காய்வு செயற்படுத்தப்பட வேண்டிய போதிலும் நிதியத்திற்காக உள்ளகக் கணக்காய்வு அலகொன்று தாபிக்கப்பட்டிருக்கவில்லை. விளையாட்டு அமைச்சின் கீழ் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று தாபிக்கப்பட்டிருந்த போதிலும், தேசிய விளையாட்டுக்கள் நிதியத்தின் பணிகள் அந்த உள்ளக கணக்காய்வு அலகின் மூலம் மேற்கொள்வதற்கு கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

### 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதிடப்பட்ட தொகைகளையும் உள்ளவாறான தொகைகளையும் ஒப்பிடும் போது 11 விடயங்களுக்குரியதாக 14 முதல் 100 சதவீதம் வரையான விலகல்கள் அவதானிக்கப்பட்டமையால், பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லையென அவதானிக்கப்பட்டது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது அமைச்சுச் செயலாளரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் | | அவதானிப்புக்கள் |
| --- | --- | --- |
| (அ) | பாதீட்டுக் கட்டுப்பாடு | பாதிடப்பட்ட செலவினங்களுக்கும் உள்ளவாறான செலவினங்களுக்கும் இடையே விலகல்கள் காணப்பட்டமை. |
| (ஆ) | உள்ளகக் கணக்காய்வு | உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்படாமை. |